செ.வெ.எண்: 55 நாள்:19.08.2016

# விநாயகர் சிலைகளை நீர் நிலைகளில் கரைப்பதற்கான வழிமுறைகள் பற்றிய புதுக்கோட்டை மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.சு.கணேஷ்,இ.ஆ.ப., அவர்களின் அறிவிப்பு

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தலைமையிலான தமிழக அரசு சுற்றுச்சூழலை பாதுகாக்கும் வகையில் பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொண்டு வருகிறது. அதன் அடிப்படையில் சுற்றுச்சூழல் பாதுகாப்பில் மக்களாகிய நமக்கு மிகப்பெரிய கடமை இருக்கிறது. நீர் நிலைகள் (கடல், ஆறு மற்றும் குளம்) நமக்கு குடிநீர் ஆதாரத்தை தருகிறது. நீர் நிலைகளை பாதுகாக்கும் வகையில் வருகிற விநாயகர் சதுர்த்தி விழாவினை கொண்டாடும்போது விநாயர் சிலைகளை மாவட்ட நிர்வாகத்தினால் குறிப்பிடப்பட்டுள்ள இடங்களில் மட்டுமே கரைத்து சுற்றுச்சூழலை பாதுகாக்க ஒத்துழைப்பு வழங்க வேண்டுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

எனவே, பொதுமக்களுக்கு கீழ்கண்டவாறு வேண்டுகோள் விடப்படுகிறது.

1. களிமண்ணால் செய்யப்பட்டதும்/சுடப்படாததும் மற்றும் எவ்வித இரசாயனக் கலவையற்றதுமான கிழங்கு மாவு மற்றும் மரவள்ளிக்கிழங்கிலிருந்து தயாரிக்கும் ஜவ்வரிசி தொழிற்சாலை கழிவுகள் போன்ற சுற்றுச்சூழலை பாதிக்காத மூலப்பொருள்களால் மட்டுமே செய்யப்பட்டதுமான விநாயர் சிலைகளை நீர்நிலைகளில் பாதுகாப்பான முறையில் கரைக்க அனுமதிக்கப்படும்.
2. இரசாயன வர்ணம் பூசப்பட்ட விநாயகர் சிலைகளை நீர் நிலைகளில் கரைக்க அனுமதிக்கப்படமாட்டாது.
3. புதுக்கோட்டை நகர்ப்புறங்களில் அமைக்கப்பட்டுள்ள விநாயகர் சிலைகளை புதுக்குளத்திலும், பொன்னமராவதி பகுதியில் உள்ள சிலைகளை பொன்புதுப்பட்டியில் உள்ள செங்கை ஊரணியிலும், ஆலங்குடியில் செட்டிக்குளத்திலும், திருவரங்குளத்தில் தெப்பக்குளத்திலும், கம்பன்காடு பகுதியில் முத்த ஊரணியிலும், அறந்தாங்கியில் வீரமாகாளியம்மன் கோயில் குளத்திலும், குலமங்களம் பகுதியில் பெரிய குளத்திலும், பனங்குளம் பகுதியில் தெற்கு உடையார்புரம் ஊரணியிலும், புளிச்சங்காடு பகுதியில் புளிச்சங்காடு குளத்திலும் மற்றும் புளிச்சங்காடு கைகாட்டி, அணவயல் பகுதியில் உள்ள சிலைகளை மூக்கரை பிள்ளையார் கோயில் ஊரணியிலும் கரைக்க வேண்டும்.

விநாயகர் சதுர்த்தியை பாரம்பரிய வழக்கப்படி சுற்றுச் சூழலைப் பாதிக்காதவாறு கொண்டாடும்படி புதுக்கோட்டை மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.சு.கணேஷ், இ.ஆ.ப., அவர்கள் கேட்டுக்கொள்கிறார்.

**செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், புதுக்கோட்டை.**